Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★


# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 92

யாழ்ப்பாணம் வைகாசி 1 ரபி: அவ் 19 சனிக்கிழமை (15-5-71)

புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து, வெளியிடும் எவர்பிறைற் சோப்பை பாவியுங்கள்




பிறேமா தொழிற்சாலை-பருத்தித்துறை

## அச்சுவேலி தொழில் பேட்டையில்

## தொழில் ஆரம்பிக்க விரும்புவோருக்கு அறிவிப்பு

# மே 22-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்

## அதிக அந்நிய செலாவணி கிடைக்கும் தொழிலுக்கு முதலிடம்

கோட்டை, வெள்ளி

**அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்பும் உள்ளூர் கைத்தொழிலாளர்களை இம்மாதம் 22-ம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கைத்தொழில் அபிவிருத்திச்சபை நேற்று அறிவித்தது.**

மே மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் கைத்தொழில் அபிவிருத்தி சபை கைத்தொழிலாளர்களின் சாட்சியங்களை நேரில் கேட்டறிய இருப்பதாகவும் அதற்கு முன்னர் அதாவது மே மாதம் 22-ம் திகதிக்கு முன்னர் தொழிற்பேட்டையில் தொழிற்சாலைகளை நிறுவ விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடனோ அல்லது கொழும்பிலுள்ள கைத்தொழில் அபிவிருத்திசபை அலுவலகத்துடனோ தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர் மூலப்பொருட்களைக்கொண்டு பெருந்தொகையான வெளிநாட்டு அந்நிய செலாவணியைப் பெறக்கூடிய உள்ளூர் கைத்தொழில்களை அச்சுவேலியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழிற்பேட்டையில் நிறுவ கைத்தொழில் அபிவிருத்தி சபை விரும்புவதாகவும் கூறப்பட்டது.

தொழிற்சாலைகளை நிறுவ விரும்பும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை மேமாதம் 25-ம் திகதி விண்ணப்பதாரர் முன்னிலையில் கைத்தொழில் அபிவிருத்திசபைபரிசீலனை செய்யும் என்று தெரிய வருகிறது.

## ஊரடங்கு நேரத்தில் வெளியில் நடமாடக்கூடாது

### பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரத்தில் எவரும்பொது இடங்களிலோ வீதிகளிலோ நடமாடினால் ஆபத்து ஏற்படுமென பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிமேலும் தெரிவித்ததாவது: ஊரடங்குநேரத்தில் பொதுஇடங்களிலோ வீதிகளிலோ காணப்படுபவர்கள் கைது செய்யப்படுபவர்கள் சில சமயம் சுடப்படுவார்கள். கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள், இரு வாரங்கள் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப்படுவார்கள். யாழ்ப்பாணத்தில் சிலபகுதிகளில் தெரிந்தோ தெரியாமலோ சிலர் ஊரடங்கு நேரத்தில் நடமாடுகிறார்கள். இவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இரவு 7-30 மணிக்கும், காலை 4-30 மணிக்குமிடை எவரும் வெளியில் நடமாடக்கூடாது.

## பயங்கரவாதிகள் மேலும் பலர் அகப்பட்டனர்!

கோட்டை, வெள்ளி

இன்று மேலும் 100 பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கேகாலை, குருநாகல், அனுராதபுரம், மாத்தறை ஆகிய இடங்களில் அநேக பயங்கரவாதிகள் சரணடைந்தும் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர்.

பயங்கரவாதிகள் பற்றிய அறிக்கைகள் சேர்க்கப்பட்டு உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மொறகமாவில் வீடுகளுக்குத் தீ வைத்த 8 பயங்கரவாதிகளை பொலிசார் கைது செய்தனர். அவர்களால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டைனமைட் வெடிகுண்டுகள் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

### தபால் நிலையம் சீர்திருத்தம்

மாத்தளை மாவட்டத்தில் பயங்கரவாதிகளினால் சேதப்படுத்தப்பட்ட தபால்நிலையம் மீண்டும் சீர்திருத்தம் செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### நன்கொடையும் அனுதாபமும்

இலங்கை பட்டதாரிகள் சங்கம் பயங்கரவாதிகள் செய்தநாசகாரவேலைகளுக்கு கண்டனம் தெரிவித்தும் அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது பற்றி அரசாங்கத்தைப் பாராட்டியும் கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கை கூட்டுறவு சம்மேளனம், பொய்வதந்திகளைப் பரப்பவேண்டாமென்றும் அரசாங்க பொலிஸ் இராணுவ நிதிக்காக ஒருநாளைய சம்பளத்தை வழங்கும்படியும் ஊழியர்களைக் கேட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

### ஆஸ்பத்திரியில் பார்வையிடும் நேரத்தில்மாற்றம்

கோட்டை, சனி

இன்றுமுதல் சகல அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நோயாளரை பொதுமக்கள் பார்வையிடும் நேரத்தில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

காலையில் 11-30 மணி தொடக்கம் 12-30 மணி வரை நோயாளரை பார்க்க பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர் மாலையில் 4 மணி தொடக்கம் [illegible] அனுமதிக்கப்[illegible]

அரசியல் நிர்ணயசபையில்

## ஐ. தே. கட்சி வெளிநடப்பு

### "பயங்கரவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் நடவடிக்கை இது"

—கொல்வின்

கொழும்பு, வெள்ளி

அரசியல் நிர்ணயசபை இன்று கூடியபொழுது ஐ. தே. கட்சி அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இன்று நாட்டில் அவசரகால நிலைமை இருப்பதினால் அரசியல் நிர்ணயசபையை ஒத்திவைக்குமாறு திரு ஜே. ஆர் ஜயவர்த்தன கேட்டுக்கொண்டபோது அதைச் சபை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து ஐ தே கட்சி வெளிநடப்புச் செய்தது.

வல்வெட்டித் துறையில் நடைபெற்ற சர்வகட்சிமகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பற்றி பின்னர் ஒருதிகதியில்பேச்சுவார்த்தை நடத்தலாமென மகாநாட்டுச் செயலாளருக்கு பிரதமரின் ஆலோசனையின்பேரில் மைத்திரிபாலசேனநாயகா அறிவித்திருப்பதினால் அப் பேச்சுவார்த்தை நடைபெறும் வரை அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர்திரு வி. தர்மலிங்கம் கேட்டுக்கொண்டார். சுயேட்சை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளருமான திரு முதியான்சே தென்னக்கூனும் அரசியல் நிர்ணயசபையை ஒத்தி வைக்குமாறு கோரினார்-இக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமையால் இன்றைய சூழ்நிலையில்தாம் கலந்துகொள்வதில் எவ்வித பயனுமில்லைஎனக்கூறி எதிர்கட்சித்தலைவர் ஜே ஆர் ஜயவர்த்தன வெளிநடப்புச் செய்ய திரு டட்லி உட்பட ஐ தே கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் வெளிநடப்புச் செய்தனர்

அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் கொல்வின் ஆர் டி சில்வா பேசுகையில் கூறியதாவது: பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இப்படியான முயற்சிகள் உதவும் என்றும் பயங்கரவாதத்தை பேச்சளவில் எதிர்ப்பதாக பேசிக்கொண்டிருப்பவர்கள் இப்படியான

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்வி ஸ்தாபனத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு நடுத்தர வயதுடைய யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆண் அல்லது பெண் உடனடியாகத் தேவை. கல்வித் தகைமைகள், வேலை அனுபவம் பற்றிய நற்சான்றிதழ்களுடன் முழு நேரம் அல்லது பகுதி நேர வேலைக்கு எதிர்பார்க்கும் சம்பளம் குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், 30, காலி வீதி, கொழும்பு 6 3104

ஸ்தாபனத்திற்கு மனேச்சர், விற்பனையாளர் தேவை. மனேச்சர் ரூபா 3000 பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும், விற்பனையாளர் ரூபா 1000/- பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். விவசாய இரசாயனப் பொருட்கள் பற்றிய நல்ல தேர்ச்சி இருத்தல் வேண்டும். இருநற்சாட்சிப்பத்திரங்களுடன் இம்மாதம் 22-ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 3103, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3103

## கல்வி

யாழ். நுண்கலை தொழில் பாடசாலை 426, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். மோட்டார் இயந்திரவியல் டிப்ளோமா (Diploma) ஒரு வருடம் மோட்டார்கார்கள், ஸ்கூட்டர் டீசல் எஞ்சின் வாட்டர்பம்ப்களில செய்முறையிலும் படிமுறையிலும் விசேஷ பயிற்சி அளிக்கப்படும். தையல் வேலை "டிப்ளோமா" (Diploma) மெசின் வருடம். சகல விபரங்களுக்கும் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது தபால் முத்திரையும் விலாசமுடைய தபாலுறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை 5-5-71ல் ஆரம்பமாகும். கௌரவத் தலைவர் சிவ. உ. சோமசேகரம், கௌரவ காரியதரிசி இ. சபாலிங்கம். 2774

## விற்பனைக்கு

புளியங்குளத்தில் பூநகரி சந்தியில் நன்றாகத் திருத்தப்பட்ட 15 ஏக்கர் வயல் நிலம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ஞா. தேவராசா, No 83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 2477


REGAL - Jaffna
Daily- 10-30 a. m. & 2-30 p. m. Only
The greatest war picture ever created in our history
Greater than THE GUNS OF NAVARONE
Frederick Stafford
in
EAGLES OVER LONDON
" லண்டனின் போர்க் கழுகுகள் "
என்னும் ஓர் பயங்கர யுத்தப்படம்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00
ஜெமினி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 பி. ப 2-00
மாஸ்டர் பிரபாகர் பேபி சுமதி - செளகார் நடித்த
வா ராஜா வா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 1-30
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நம்பியார்—நாகேஷ்
மனோரமா மற்றும் பலர் நடித்த
படகோட்டி
(சவ்மன்கலர் சித்திரம்)
டைரக்ஷன்
T. பிரகாஸ்ராவ்

கெப்பிட்டல்
காலை 10, பி. ப. 2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

ஹிங்ஸ்லி
காலை 10, பி. ப 2-00 மணி
தில்லானா மோகனாம்பாள்

ஸ்ரீ மலன்
காலை 10, பி. ப 2-00 மணி
வேட்டைக்காரன்

பிளாஸா
காலை 10, பி. ப. 2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(ஈஸ்மன் சித்திரம்)


## தேவை

மருதனார்மடம் சந்தி-(பெற்றோல் செட் முன்னால்) புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கணேசபவான் ஓட்டலுக்கு கசியர் - டீமேக்கர் குசினி வேலைக்காரர் பரிமாறுபவர்கள் தேவை. விரும்புவோர் 25-5-71 திகதிக்கு முன் நேரில் சமுகம் தருக. கசியர், பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். 3102

## மேற்றிராணியார் இறுதிச் சடங்கு

கோட்டை, சனி

காலஞ்சென்ற கொழும்பு மேற்றிராணியார் வண. ஹரோல்ட் டி. சில்வாவின் இறுதிச் சடங்குகள் இன்று கொழும்பில் நடைபெறும்.

லண்டனில் காலமான இவரது பூதவுடல் விசேஷ விமானத்தில் நேற்று கொழும்பு வந்துசேர்ந்தது. கொள்ளுப்பிட்டியிலுள்ள மேற்றிராணியார் இல்லத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது.

## பல்கலைக்கழகங்கள் இப்போதைக்கு திறக்கப்படமாட்டா

கோட்டை, வெள்ளி

பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்க மாதங்கள் பல ஆகுமென்று கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியூதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

வித்தியோதய வித்தியாலங்கார ஆகிய இரு பல்கலைக் கழகங்களும் புனர்வாழ்வு நிலையங்களாக உபயோகிக்கப்படுவதால், அவ்வேலைகள் பூர்த்தியடையும் வரை திறக்கப்படாதென்றார் அவர்.


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30
ஜெமினி - ஜெய்சங்கர் நடித்த
பூவா தலையா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி. ப. 1-30
ஜெமினி — சௌகார்ஜானகி நடித்த
இரு கோடுகள்

வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30
முத்துராமன் — விஜயகுமாரி நடித்த
பொலிஸ்காரன் மகள்

RAJAH - JAFFNA
Daily
10-00 a m. 1-30 & 4-00 p.m.
Eli Wallach,
Terrence Hill
in
ACE HIGH
(Color - From Paramount)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Terry Thomas
in
It's A MAD, MAD, MAD, MAD WORLD
(Scope color)
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி நடித்த
சபதம் தம்பி


## நெல்லியடியில்

# அநாதரவாகக் கிடந்த பிணம்

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடியிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிக்கண்மையில் பிரதான வீதியினருகிலுள்ள குளியொன்றில் பட்டப்பகலில் அநாதரவான நிலையில் கிடந்த பிணம் ஒன்று இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. கரணவாய் வடக்கைச் சேர்ந்த கொற்றுவத்தை என்னுமிடத்திலுள்ள சிவலிங்கம் என்னும் இளைஞரே பிணமாகக் கிடந்தவரென அடையாளம் காணப்பட்டது.

இச்சடலத்தினருகில் சைக்கிளொன்றும் காணப்பட்டது. காலஞ்சென்றவர் சைக்கிளில் வந்துகொண்டிருக்கையில் மோட்டார் வாகனம் இவரை மோதித் தள்ளியதால் இவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

இவ்விபத்து மழைபெய்துகொண்டிருக்கும்போது நிகழ்ந்ததால் பல மணி நேரம் எவருக்குமே தெரியவில்லையாம். இறந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இதுசம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# நூல் மதிப்புரை

நூல்: இராசிப்பலன் (துலாம் தொடக்கம் மீனம் வரை 6 தனித் தனி சிறு நூல். 14-4-71 லிருந்து 13-4-72 வரை)

எழுதியவர்: ஆயர்பாடி சோதிடர் வே. த. மயில்வாகனம்

வெளியீடு: ஆயர்பாடி சோதிட நிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.


விலை: தனிப்பிரதி 1 ரூபா 20 சதம்.

ஆயர்பாடி சோதிடர் திரு. வே. த. மயில்வாகனம் அவர்களால் கணிக்கப்பெற்று வெளியிடப்பட்ட துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் முதலிய இராசிகளில் பிறந்தவர்களின் வருடபலன்களைக் கொண்ட தனித் தனி நூல்கள் வரப்பெற்றோம். மேடம் முதல் கன்னி வரையிலான ஆறு இராசிகளினதும் பலன்கள் ஏற்கனவே வெளிவந்து விமர்சிக்கப்பட்டது தெரிந்ததே. இப்பொழுது பின் ஆறு இராசிகளுக்குரிய பலன்களின் நூலாக வெளிவந்துள்ளதை ஆயர்பாடியர் தம்மை வஞ்சித்துவிட்டதாக வருந்தப்பட்டுக்கொண்டிருந்த குறிப்பிட்ட இராசியானவருக்குத் திருப்தி தருவதாகும்.

முதல் ஆறு இராசிகளின் பலன்களைக் கொண்ட ஆறு நூல்களின் அமைப்பைப் போன்றே பிந்திய நூல்களும் வெளிவந்துள்ளன. 1971 ஏப்ரல் 14-ந் திகதி முதல் 72 ஏப்ரல் 13-ந் திகதி வரைக்கும் ஆண் பெண் இரு பாலாருக்கும் மாதவாரியாக ஒவ்வொரு இராசிக்கும் எளிய முறையில் யாருக்கும் இலகுவில் விளங்கும் வகையில் பலன் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு இராசிப்பலன் நூலிலும் அந்தந்த இராசிக்காரரின் பிறப்பின் தன்மை, தந்தை, தாய், சகோதரம், மனைவி, கணவன், கல்வி, உத்தியோகம் முதலிய தகவல்களும் மற்றும் செய்யவேண்டியது, செய்யக்கூடாதது, நன்மை தரும் செயல்கள், தீமை பயக்கும் செயல்கள் முதலிய விபரங்களும் துன்பகாலத்தைச் சமாளிக்கும் அறிவுரைகளும் சாந்தி பரிகாரங்களும் விபரமாக விளக்கப்பட்டுள்ளன.

இந்நூல் எங்கும் கிடைக்கும்.

— ஆதிரை



## உத்தியோகப்பற்றற்ற பார்வையாளர்

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய்த்தேர்தல் தொகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக திரு. க. சின்னத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். பல நோக்குக் கூட்டுறவு சமாசம், ப நோக்கூட்டுறவு சங்கங்கள், பண்டகசாலை ஆகியவற்றுக்கு பார்வையாளராகக் கடமையாற்றுவார். இவர் ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், புத்தூர் கிராமசபை 10ம் வட்டார அங்கத்தவருமாவார். இவர் கோப்பாய்த் தொகுதி தமிழரசுக்கட்சி மாவட்டக் கிளைச் செயலாளருமாவர்.

வர்த்தக அமைச்சர் திரு. ரி பி இலங்கரத்தினாவினால் இவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டது.

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாண, சனி

இன்று வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய கொடியேற்ற மகோற்சவம் ஆரம்பமாகின்றது. இவ்விழா தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும். இம்மாதம் 23, 24, 25-ம் திகதிகளில் முறையேசதோற்சவம் தீர்த்தோற்சவம் பூங்காவனம் ஆகிய விழாக்கள் வெகு விமரிசையாக நடைபெறும்.


17-5-71 ஈழநாடு வாரமலர்
வெள்ளி மல்லிகையில்
அ. செ. மு.
எழுதும்
மாணிக்கப் பொன்
மயிலான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுக் குடியரசில் அரசியல்நெருக்கடி

## 6 அமைச்சர்கள் ராஜினமா

கெய்ரோ, மே 14

ஐக்கிய அரபுக்குடியரசு அரசாங்கத்தின் பெரும் நெருக்கடியொன்று இப்பொழுது அம்பலமாகியிருக்கின்றது.

அதிபர் சதாத்தின் ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியைத் தவிர்த்து நிலைமையைச் சமாளிப்பதற்கு அவர் பெரும் முயற்சி எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

எகிப்திய மந்திரிசபையிலி ஆறு அமைச்சர்கள் ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி வெளியாகியுள்ளதாகத் தெரிகின்றது.

எகிப்திய மந்திரிசபையிலிருந்து ஆறு முக்கிய மந்திரிகள் விலகிக்கொண்டுள்ளார்கள். ஆறு மந்திரிகளுடன் ஐக்கிய அரபுக் குடியரசிலுள்ள ஒரே அரசியல் கட்சியான அரபு சோஷலிஸ யூனியனின் முக்கிய தலைவர்களான மூன்று பிரமுகர்களும் விலகிக்கொண்டிருக்கிருர்கள்.

மந்திரிகளில் யுத்த மந்திரியும் ஒருவர். எகிப்திய தேசிய சட்டசபையின் சபாநாயகரும் ராஜினமா செய்திருக்கிருர். இந்த ராஜினமாக்கள் அனைத்தையும் அதிபர் சதாத் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த வாரம் உதவி ஜனதிபதிகளில் ஒருவரான அலிசாப்ரியை அதிபர் பதவி நீக்கம் செய்தார். அதைத் தொடர்ந்து இப்பொழுது மேலும் பல முக்கியஸ்தர்கள் பதவியிலிருந்து விலகியுள்ளனர்.

அதிபர் சதாத் தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள இனி நடவடிக்கைகள் எடுப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ராஜினமாக்களுக்கான காரணங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனல் நாட்டின் பாதுகாப்புக்கு எதிராக இயங்கும் சில சக்திகள் பற்றி விசாரணை நடத்தும்படி அதிபர் உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

### தாக்குதல்

புதுடில்லி, மே 14

கிழக்கு வங்க 'முஜிபுர்' ஆதரவு வீரர்கள் டாக்காவிலிருந்து 65 கிலோமீட்டர் தூரத்தில், பத்மா நதியில் கொரில்லா முறையில் தாக்குதல் நடாத்திவருகிருர்கள். பத்மா நதியிலுள்ள பாகிஸ்தான்படை வீரர்களை பதுங்கியிருந்து துப்பாக்கி மூலம் சுட்டுத் தள்ளினர்.

இதேபோன்று ரோந்துப் படை வீரர்கள் மீதும் மறைந்திருந்து தாக்கிருர்கள். பாகிஸ்தான்படை வீரர்கள் பலர் கொல்லப்பட்டதாக எல்லைக்கப்பாலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### 'ஜப்' விமானத்தை கடத்தச் செல்ல முயற்சி

டோக்கியோ, மே 14

ஜப்பான் பிரயாணிகள் விமானமொன்றைத் திசை திருப்ப எடுத்த முயற்சி பலிக்கவில்லை. நேற்று டோக்கியோவிலிருந்து 49 பேருடன் புறப்பட்ட விமானத்தில் திடீரென இளைஞன் ஒருவன் பாய்ந்து விமானப் பணிப்பெண் முன்நின்று கொண்டு 'விமானத்தை 'யால் யால்' என்ற இடத்தில் இறக்காவிட்டால் அழித்து விடுவேன்' என்று பயங்கரமாகக் கத்தினனும்.

வட கொரியாவைச் சேர்ந்த 38 வயது ஆசாமியான இவனது முயற்சி நிறைவேறவில்லை. அதற்குள் விமானம் பத்திரமாக மீண்டும் டோக்கியோ விமான நிலையத்தில் பத்திரமாக இறக்கப்பட்டது. விமானத்தைத் திசைதிருப்ப முயன்றவன் கைது செய்யப்பட்டான். இவனது மனநிலை சரியில்லாதது இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புதிய
அசல் (ராஜாவண்ணம்)
வின்சென்ட்ஸ்
ஏ.எஸ்.சீ.
வில்லைகள்
தலைவலி, தடிமன், சனிச்சுரம் மற்றும் எல்லாவித உபாதைகளுக்கும் நிவாரணி
யாவரும் இப்பொழுது நாடுவது வின்சென்ட்ஸ் ஏ. எஸ். சீ. வில்லைகளையே

## 'சின்டிகேற்' தலைவர்தெரிவில் கருத்தொற்றுமையில்லை

புதுடில்லி மே 14

நிஜலிங்கப்பா தலைமையிலான சின்டிகேற் காங்கிரஸ் தனது புதிய தலைவரைத் தேர்தல் முறையில் தேர்ந்தெடுப்பதென முடிவுசெய்துள்ளது.

நேற்றுக்கூடிய கட்சியின் காரியக்கமிட்டி இந்த முடிவை எடுத்துக்கொண்டது. உயர் தலைவர்களுக்குள் பொதுவான ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில ஒரு ஏகமனதான முடிவுக்கு வராததாலேயே தேர்தல் முறையில் தங்கள் தலைவரைத் தெரிவுசெய்வதென்ற தீர்மானத்துக்குக் காரியக் கமிட்டி வந்தது.

கட்சியின் புதிய தலைவர் பதவிக்கு காமராஜர், மொரார்ஜி தேசாய் ஆகியோருடைய பெயர்கள் பலமாக அடிபடுகின்றன.

### அரசுக்கு ஆதரவு

அரியாலை வெள்ளி

பயங்கரவாதிகளின் நடத்தை குறித்து கண்டனமும் அரசுக்கு ஆதரவும் தெரிவித்து நல்லலூர் லங்கா ஜாதிக குரு சங்கக் கிளை தீர்மானம் நிறைவேற்றியது. பயங்கரவாதிகளினல் நாட்டின் பலபாகங்களில் ஏற்பட்ட அழிவுகளுக்கும் உதவும் நிதியாக தமது சங்கத்தின் ஆசிரியர்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### குஜராத்தில் ஜனதிபதி ஆட்சி

புதுடில்லி, மே 14

குஜராத் மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டுவிட்டது. அங்கு ஜனதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### அமைச்சர் நேர்த்திக்கடன்

சுழிபுரம், வெள்ளி

மூளாய் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா வைபவத்திலும் தீர்த்த வைபவத்திலுப் தபால்தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் கலந்துகொண்டு தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றிக்கொண்டார்.

### மகஜர்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் அரசாங்கத்துக்குத் தனது பூரண ஆதரவைத் தெரிவிக்கும் மகஜர் ஒன்றைப் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளது.

## ஊவாபகுதிபயங்கரவாதிகள் 'தலைவன்' சிக்கினன்

கோட்டை, வெள்ளி

ஊவாமாகாண பயங்கரவாதிகள் தலைவன் கருணடா என்பவன் பாதுகாப்புபடைகளிடம் மாட்டிக் கொண்டான். வெலிமடை பொலிஸ் நிலையத்தை தாக்கிய பயங்கரவாதிகள் கோஷ்டிக்கு இவன்தலைமை தாங்கினன். கைதான இவன் வெளியிட்ட தகவல்களைக் கொண்டு ஏராளமான டைனமைற்றுகளும் பயங்கர ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மொரகொல்லகம என்ற இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்தை பயங்கரவாதிகள் கோஷ்டிதாக்கியுள்ளது. பொலிஸாருக்கும் இவர்களுக்குமிடையில் பலத்த சண்டை நடந்தது. இதே போன்று ரயில் நிலையத்தையும் தபால் நிலையத்தையும் பயங்கரவாதிகள் தாக்கி சேதத்தையும் பயங்கரவாதிகள் தாக்கி சேதத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்திலுள்ள காடொன்றில் பதுங்கியிருக்கும் பயங்கரவாதிகள் கோஷ்டியை ஒழித்துக்கட்டுவதற்கு விமானத்திலிருந்து பாதுகாப்புப் படை குண்டுகளைப் போட்டது.

பத்தோலிமுன என்ற இடத்தில் பயங்கரவாதிகள் கோஷ்டி ஒன்று வீடொன்றுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களைத் தாக்கி மூவாயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்ருர்களென்று செய்திகள் தெரிவிக்கின்றன. மாத்தறை மாவட்டத்தில் உபதபால் நிலையமொன்று நேற்று சேதத்துக்குள்ளானது.

தற்கொலை செய்யும்

## பயங்கரவாதிகள் வெளியிட்ட சுவையான தகவல்கள்

கோட்டை, வெள்ளி

பயங்கரவாதிகள் சரணடைவதற்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்துள்ள போதிலும் ஏராளமானேர் நாளாந்தம் சரணடைந்து வருவதாகவும், அவர்களை இராணுவ பொலிஸ் நிலையங்கள் சரணடைவதற்கான காலத்தில் நடத்தியவாறு நடத்துவதாகவும் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

பல பயங்கரவாதிகள் தற்கொலை செய்து வருவதாக அவர்களே தங்கள் கைப்பட அரசாங்கத்துக்கு எழுதிய கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது. கடிதங்களில் தங்களைச் சேர்ந்தவர்கள் பற்றிய விபரங்களையும் தங்களது இயக்கத்தின் திட்டங்களையும் சுவையாக விபரித்துக் கூறியுள்ளனர். தங்களது தலைவர்கள் தங்களை தவருன வழிநடத்திவிட்டதாகவும அக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

### நிதிசேர்க்க முடிவு

குருநகர், வெள்ளி

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்குப் பலியான நொச்சியாகம உபதபால் அதிபர் திரு. முதியான்சே மெள்ளக்கனின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்கான நிதி சேர்க்கும் பணியில் அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் சங்கம் ஈடுபட்டுள்ளதாக மேற்படி சங்கச் செயலாளர் திரு. ஐ. நடராஜா தெரிவித்தார்.

இது சம்பந்தமாக தபால ... ... தெரிவித்துள்ளனர்.

## இலங்கையில் வடகொரிய நட்புறவுச் சங்கங்கள்

### முழு அளவிலான விசாரணை வேண்டும் என்கிருர் செனட்டர் இச்சிலான்

கோட்டை, வெள்ளி

இலங்கையில் வடகொரியத் தூதரகம் ஏற்படுத்திய நட்புறவுச் சங்கங்கள் பற்றிய முழு அளவிலான விசாரணை ஒன்றைப் பிரதமர் நடத்தவேண்டிய சரியான சந்தர்ப்பம் இதுவாகும். இந்தச் சங்கங்களுடன் இலங்கைப் பிரஜைகள் எந்தளவுக்கு யார் யார் தொடர்பு கொண்டிருக்கிருர்கள் என்பது ஆராயப்படவேண்டுமெனச் செனட்டர் எம். டி. இச்சிலான் வேண்டுகோள் ஒன்றைச் செனட்டில் விடுத்துள்ளார்.

செனட்சபைத் தலைவர் திரு. ஏ. இரத்நாயக்கா தலைமையில் நேற்று செனட் சபைக் கூட்டம் நடைபெற்ற பொழுது திரு. இச்சிலான் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இலங்கையின் பல பகுதிகளில் நட்புறவுச் சங்கங்கள் என்ற பெயரில் பல தவருன செயல்களில் அண்மையில் மூடப்பட்ட வடகொரியத் தூதரகம் செயற்பட்டு வந்திருக்கிறது. நாட்டின் இன்றைய பிரச்சினையில் மூடப்பட்ட தூதரகமும் அது ஏற்படுத்திச் செயற்பட்டுவந்த நட்புறவுச் சங்கங்களும் எவ்வளவு தூரம் தொடர்புடையன வையாக இருந்தனவென்பதைப் பிரதமர் ஆராயவேண்டும்.

பொதுமக்கள் இப்பொழுது குடியரசு நிறுவவில்லை, புதிய அரசியல் திட்டம் வரையவில்லை. அக்கறை உடையவர்களாயில்லை இருசோத்து அரிசியும். வேலை வாய்ப்பும் கொடுப்பதாகச் சொல்லிய அரசு, இப்பொழுது முக்கியமில்லாத அரசு விவகாரங்களையே பேசிவருகிறது. விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர் இளைஞர்களும் இதே நிலையில்தான் இருக்கின்றனர்.

இளைஞர்கள் தவருன வழியில் நடத்திச்செல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியாளுல் வழிநடத்தியவர்கள் யார்? இதைப் பிரதமரிடமிருந்து மக்கள் அறிய விரும்புகிருர்கள். ஜனதா விமுக்தி பெரமுனை நான்கு வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன. அது உண்மையாளுல் ஏன் அதன் தவருன செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை? ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை வன்முறை மூலம் நீக்கவேண்டுமெனப் பிரசாரம் செய்துவந்தவர்களை ஏன் தடுக்கவில்லை? மக்கள் எதைச் சொன்னலும் டட்லி சேனநாயக்கா ஒரு கொலைகாரதிதான் என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில அதிகப் பிரசங்கிகள்!

— நையாண்டி பாரதி —

சில பிரசங்கங்களின்போது நிகழ்ந்த அநாவசிய அதிகப் பிரசங்கங்கள் சுவையான விஷயங்களாகும்.

ஒரு சமயம் நடந்தது இது. ஒரு பிரசங்கி தடபுடலாக எழுந்தார். ஆங்கிலத்தில் பேசத்துடித்தார் அவர். 'மிஸ்டர் பிரஸிடெண்ட்! லேடீஸ் அன் ஜென்டில்மென்! வீ தி ஸ்டுடென்ஸ் ஆவ் தி க்ஷத்ரியா ஹாஸ்டல்' என்று தொடங்கினார். எடுப்பு பிரமாதம் எஸ். ஐ. ஆர். வண்டி திண்டுக்கல்லுக்கும் கொடைக்கானல்ரோடுக்கும் இடையே உள்ள சாய்வினூடே போகுமே அதுவேகமாக, அப்படி ரொம்ப ஸ்பீடாக உருட்டிவிட்டார் வார்த்தைகளை. ஒரு வார்த்தையை 'டக்வாரென' ஓங்கி அடித்த உடனே என்ன நடந்தது தெரியுமோ? அவருக்கு மேலே பேச்சு ஓடவில்லை. திணறினார். அப்புறம் 'ஸார், நான தமிழிலேயே பேசுகிறேனே' என்று கெஞ்சினார். சபையினர் ஆரவாரிக்காமல் இருப்பார்களா? ஆயிரமாயிரம் பொரித்த அப்பளாங்களை அடித்து நொறுக்குவது போல் ஒலித்தது பலமான அப்ளாஸ்.

ஒரு குட்டிப்பிரசங்கி இப்படித்தான் இங்கிலீஷிலே பேச முன்வந்தாரு வந்தாரா! — ஏதோ சில வார்த்தைகள் பேசியதற்கு மேலே ஓடவில்லை. என்ன செய்வது? ஆகவே 'டோடிஜின்—டொட டோடிஜின்.... டிடொடிஜின டோட்' என்று சொல் அம்மானை விளையாடிவிட்டு உட்கார்ந்தார் அதன் அர்த்தமென்ன? அதிகப் பிரசங்கிக்கே தெரியாது. அப்புறமல்லவா கேட்டவர்களுக்கு விளங்கியதா இல்லையா என்று ஆராயவேண்டும்.

ஆனால், பேச்சுக்கலைச்செல்வர்களும் பேச்சு விற்பன்னர்களும் இருக்கவே இருக்கிறார்கள் அவர்கள் எங்கேலாகும் பேசிப்பேசிப் பண்பட்டு விட்டவர்கள் அவர்கள் பேசுவதே தனிக்கலை. கேட்போரை வசியம்செய்து வியப்புறப் பண்ணிவிடும். அவர்களைப்பற்றி நான் ஏன் கவலைப்படவேணும்?

சரி, ஆண்பேச்சாளர்கள் பற்றி இவ்வளவு தூரம் அளந்தேனே. பெண் பிரசங்கிகள் பற்றி ஏன் எதுவும் 'மறையலே' என்ற ஐயப்பாடு எழுவது இயல்பு. ஓர் சிறிது புகல்வாம்.

'பெண்கள் மேடையில் நின்று பேசுவது என்பது நாய்கள் பின்னங்கால்களால் நின்று டான்ஸ் ஆடுவது மாதிரித்தான்' என்று சொல்லியிருக்கிறான் பேரறிஞன் ஜான்ஸன். ரெண்டும் விபரீதமானது. வேடிக்கையானது என்ற எண்ணத்தில் அவன் சொல்லியிருக்கலாம். கெட்டான் வீணன்!

பெண்கள் பிரசங்கம் பண்ணுவது காதுக்கு நல்விருந்தாவதை விட, கண்களுக்கு ஜோரான விருந்தாகும். ரெம்ப ஜாலியாகயிருக்கும், பிரதர்! கவனித்திருக்கிறீர்களா?

பரத நாட்டியம் பயில்வது மாதிரி; காதலனோடு சிரித்துச் சிரித்துப்பேசுகிறது போல; அன்பர்களோடு களிப்புடன் பேசுவதுபோல பள்ளிக்கூடப் பாடம்படிப்பதுபோல எப்படியெல்லாமோ பேசுவார்கள் பேசுகிறவள் மட்டும் கொஞ்சம் ஜோராக இருந்துவிட்டால் போதும் அவள் மணிக்கணக்கிலே உளறட்டும் சபை அப்படியே அண்ணாந்து வாய்பிளந்து 'ஆஹா' என ரசித்துக் கொண்டிருக்கும். அழகி பேசப்போகிறாள் என்று தெரிந்தால், அவளைக் காண வென்றே கும்பல்கூடி விடும். அதனாலே அழகி பேச்சைக்கடைசியில் வைத்து விட்டு, முதலிலே பேச விரும்புகிறவர்கள் எல்லாம் பேசிவிடவேண்டும். இல்லையெனில் அழகி பேசிமுடித்து உட்கார்ந்ததுமே கும்பல் கலைந்துவிடும். அப்புறம் பேசலாம் என்ற ஆசையுடன் இருக்கும் பிரசங்கிகள் எண்ணத்திலே மண்ணுதான்!

பேச்சுக் கேட்டு விட்டுப் போகிறகும்பல் அம்மாளின் பிரசங்கத்தைப்பற்றி சர்ச்சை பண்ணும் என நினைக்கிறீர்களா? அது ஏது. அம்மாளையே அலசிப்பிழிந்து ஆராய்ச்சிபண்ணி மகிழும்.

'வே தம்பியாபுள்ளே! பேசினாளே அவ எப்டி பார்த்தீரா?'

'ரொம்ப ஜோர்!'

'ஆமாமா. அவ ஃபேஸ்கட் இருக்குதே......'

'எக்ஸலென்ட் ஸூப்பர்ப் டீலக்ஸ் அபாரம்!'

'அவளுக்கு அதிக வயது இருக்குமனு தோணலியேடவ!'

'அவ ஸாரி கட்டியிருந்த ஜோர்தான் என்ன! நம்ம வீட்டு வாரியக் கட்டைகளும் பிரமணை மாதிரிச் சுத்திகிட்டுத்திரியுதுகளே- கழுதைகள்.'

'இவள் அழகே தனி வே. இவ ஒய்யாரி, சிங்காரி, பிரமாதி அபார அற்புத ஜோரி பேஷி அடாடா!'

இப்படிப் பலரும் அவரவர் பண்பாடு ஈடுபாடுகளுக்கு ஏற்பப் பேசிக்குளறுபடி செய்து செல்வார்கள் அது தானே வாழ்க்கை!

பிரசங்கிகளில் சிலர் பூமாலைகள் சோடா பால் இவற்றுக்காகவே பிரசங்கம் செய்யப்போகிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு உண்டு. சிலருக்கு பூமாலை போடுவது வீண் தெண்டம். பொதுவாக பூமாலை போடுவதே விருதாத் தெண்டம் தான் என்பது என் கருத்து.

பின்னே என்னய்யா! இவர்கள் சார்பிலே இவர்களுக்கு இந்தமாலையை அணிவிக்கிறேன்' என்று ஒருவர்போட போடும் முன்பே பிரசங்கி கையில் வாங்கி நாற்காலியில் தொங்கப்போட- இது வீண் இல்லாமல் என்னவாம்? கழுத்திலே விழுந்த பிறகு மாலையைக் கழட்டுவோரும் உண்டு. எப்படியும் ரோஜாப்பூ முதலாம் பூக்கள் வீணடிக்கப்படுவது 'படுவது' தானே. இல்லையா

ஒரு சிலர் கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்றுமலே ரசித்து நின்று பேசுவார்கள். அவர்களை நாம்பாராட்டத்தான் வேண்டும்.

அவ்விதம் கழற்றுமல்நின்றதோடு, தன் செயல்தான் சரி என்று கால்மணி நேரம் லெக்சர் அடித்தார் ஒருவர். அவருக்கு "பேஷோ பேஷ்" எவ்வளவு வேண்டுமாயினும் அருளலாம்.

சிலர் ஸோடா, கலர்களை பேச்சுமுடிவில் பருகுகிறார்கள். ஒரு மடக்குக் குடிப்பது. ஒன்றரை நிமிஷம் பேசுவது. கால்மடக்குக் குடித்துவிட்டுக் கால்மணிநேரம் பேசுவது என்று தொண்டைக்குழியை நனைத்துக் கொள்வதும் தொண்டை வறளக் கத்துவதுமாகப் பிரசங்கம் செய்வர் சிலர் சில பிரசங்கிகள் தங்களுக்கு 'காய்ச்சின பால்தான் வேண்டும்' என்று 'கண்டிஷன்' பேசுவார்கள் கலரோ ஸோடாவோ காற்றுக் குமிழ்விட்டு மேசைமீது காத்து நின்றாலும் கூட மோகினியைக் கண்டு மயங்காது தவம் பண்ணும் புலிகள் மாதிரி சில பிரசங்கிகள் ஏறெடுத்தும் பாராமலே இருந்து விடுவதும் உண்டு. 'உலகம் பலவிதம்' என்கிறார்களே அது மெத்தச்சரி என்று தோன்றும் பிரசங்கிகளை ஆராயும் போது!

பிரசங்கிகளைப்பற்றி இவ்வளவு சொல்லியபிறகு, சிலரது தமிழன்னைக் குதித்துக் கொஞ்சமாவது சொல்லாமல் போகமனம் வரவில்லை. சிலதீவிர தமிழன்புத் தோழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆர்வமாகப் பேசுவதைக் கேட்கவேண்டும்.

'அருமைத் தோழர்களே! நமது தாய் மொழியான தமிழானது' என்று தொடங்கிக் கர்ஜனை புரியும்போது 'கள்' எல்லாம் 'கள்'ளாகி விடும் அவர்களிடம். அவர்கள் 'வாக்க' என்றுதான்கூற வேண்டும்.

இத்தகைய உச்சரிப்புக் கொலைபாதகம் வலிதமாக நிகழுகிறது. சிலர் "என்பது" முதலியவற்றை "எம்பினது" எம்பினத்தெட்டு... "எம்பினத்தொம்பது" என்று சொல்வதும், "மற்றவர்களை" சிலர் கவித்

[5-ம் பக்கம் பார்க்க]


## ஈழம் செல்வம் செழிக்க வங்கெம் இரசாயனங்களைப் பாவியுங்கள்!

விவசாயிகளே! பொன்யுகத்தின் முன்னுடிகளாய், நம் நாட்டில் செல்வம் செழிக்க, வெங்காயமும், மிளகாயும் பயிரிடுக.
அறுவடை நன்கு பெற...அனைவரும் செல்வம் பெற...முதலடி இன்றே எடுங்கள்!

உங்கள் வெங்காய, மிளகாய்ச் செடிகளைத் தாக்கும் பூச்சி, புழுக்களையும், களைகளையும் அழிக்க, இலங்கையில் லங்கெம் ஸ்தாபனம் ஒன்று மட்டுமே களைக்கொல்லி, புழுப்பூச்சிக்கொல்லி ஆகியனவற்றையும்,செடிவளர குரோ-மோ உரத்தையும் முழுமையாக அளிக்கிறார்கள்.

அசொட்ரீன் 60, சுமித்தியன், பிளனவின், மில்ட்ரெக்ஸ், குரோ-மோ உரம், டீ.டீ. நிலப் புகைப்படுத்தி ஆகியன லங்கெம் உற்பத்திகள். வெங்காயத்திற்கும், மிளகாய்க்கும் உகந்ததாக இவை தயாரிக்கப்படுகின்றன. ஈழம் செல்வம் செழிக்க, கூடிய வெங்காயமும், மிளகாயும் நாட்டுக!




குரோ-மோர் உரம் | மில்ட்ரெக்ஸ் | அசொட்ரீன் 60, | டீ.டீ. நிலப் புகைப்படுத்தி | சுமித்தியன் | பிளனவின் | குரோ-மோ உரம்

லங்கெம் இலங்கை லிமிட்டட் சிலிங்கோ கட்டிடம் த.பெ. எண் 919 கொழும்பு டெலி. 28333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில்

# இன்சூரன்ஸ்கம்பனி நிர்வாகத்தை அரசாங்கம் பொறுப்பேற்றது

புதுடில்லி, மே 14

இந்தியாவிலுள்ள சகல இன்சூரன்ஸ் ஸ்தாபனங்களின் நிர்வாகங்களையும் மத்திய அரசாங்கம் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டுவிட்டது விசேஷ உத்தரவு ஒன்றின் மூலம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்சூரன்ஸ் தொழில் முழுவதையுமே அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கான முதல் கட்டம் இதுவாகும் என்று நிதிமந்திரி திரு. சவான் தெரிவித்திருக்கின்றார். இன்சூரன்ஸ் தொழிலைத் தேசியமயமாக்குவதற்கான புதிய சட்டமொன்றை இப்போதைய அவசரச் சட்டத்தின்படி 42 வெளிநாட்டு இன்சூரன்ஸ் ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது. இந்தக் கம்பெனிகளின் பெறுமானம் 241 கோடி ரூபாய் என்றும் இவைகளில் சுமார் 25 ஆயிரம் பேர் வேலைசெய்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஸ்தாபனங்களின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு ஆட்கள் நியமிக்கப்படும்வரையில் இப்போதைய ஊழியர்களே ஏஜண்டுகளாகக் கடமையாற்றுவார்கள்.

இந்தக் கம்பெனிகளுக்குப் போதிய நட்ட ஈடு கொடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'செல்வா கோரிக்கை: பிரசுரத்துக்கு தணிக்கை'

### செனட்டில் திருச்செல்வம்

கொழும்பு, வெள்ளி

"அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தை ஒத்திவைக்கும்படி பிரதமரிடம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் விடுத்த கோரிக்கைகூட பத்திரிகைகளில் பிரசுரிக்காதபடி தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இதனைக்கூட மக்கள் அறியக் கூடாதா?"

செனட்டர் திரு. எம். திருச்செல்வம் கியு ஸி நேற்று மேற்கண்டவாறு செனட்சபையில் கேட்டார்.

இன்று நடக்கவிருக்கும் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தை ஒத்திவைக்கும்படி திரு. செல்வநாயகம் பிரதமரிடம் கேட்டிருந்ததாகவும், அதனை பத்திரிகை பிரசுரத்துக்கு தணிக்கை அதிகாரிகள் அனுமதிக்கவில்லையென்றும் திரு. திருச்செல்வம் குறிப்பிட்டார்.

செனட் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ எவ் விஜயமானே பேசுகையில், சமீபத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களினால் பெருத்த பொருளாதார நஷ்டமும், ஈடுசெய்யமுடியாத சேதமும் ஏற்பட்டுள்ளது என்றார்.

— —

## 'சூட்டிங் ஸ்ரார்' வெற்றி

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் சூட்டிங் ஸ்ரார் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டை சிவன் சிறுவர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் சூட்டிங் ஸ்ரார் கோஷ்டியினர் மூன்று விக்கெட்டுகளாலும் 72 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றனர். போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

— —

## கோடி அர்ச்சனை

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் மகாலட்சுமிக்கு கோடி அர்ச்சனை நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. தினமும் அர்ச்சனை நடைபெற்றுவரும் இவ்வைபவத்தில் பலர் கலந்துகொள்கின்றனர். கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ சவைத்தீஸ்வரசர்மா தினமும் அர்ச்சனையை நடாத்தி வருகின்றார்.

— —

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 1-ந் திகதி

[15-5-71]

மேஷம் - சிந்தனை அலைகள் மோதும் செய்தொழிலில் மாற்ற நிலை தென்படும் அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும்.

ரிஷபம் - இதயத்தில் அமைதி குன்றும் குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும் சிறிய விடயத்திற்கும் அதிக கோபம் ஏற்படலாம்

மிதுனம் - சிறிய விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும் உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் இருப்பிரச்சினையில் கவனம்.

கடகம் - குடும்பவழியில் மனதுக்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடிவடையும்.

சிம்மம் - சிந்தையில் குழப்பநிலை தோன்றக் கூடும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம் தெய்வ நம்பிக்கை நன்று.

கன்னி - புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும் ஏழைகளுக்கு இரங்குவதில் முன்நிற்பீர்கள்

துலாம் - எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள் மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும் ஒளிமயமான தினம்.

விருச்சிகம் - வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் பலவழிகளிலும் முயற்சி செய்வீர்கள் முன்னேற்றத்துக்கு இடமுண்டு.

தனுசு - செலவினங்களைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவீர்கள் எதிலும் அதிக சோர்வு தென்படும்.

மகரம் - உள்ளத்தின் அடித்தளம் வரைக்கண்ணீர் வடிக்கும் வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும்,

கும்பம் - வார்த்தைஜாலம் செய்வதில் வல்லவராகக் காட்சியளிப்பீர்கள். பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

மீனம் - சிந்தனைகளைத் தாக்கும் சிறுவடும் கோபம் வேதனையைத் தரும், சகோதரத்தின் உடல் நிலையும் கவலையைத் தரும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## அரசுக்கு ஆதரவு

ஏழாலை, வெள்ளி

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏழாலைக் கிளை கூடி பயங்கரவாதிகளின் வன்செயல்களைக் கடுமையாகக் கண்டித்தும் மக்கள் அரசுக்கு தமது மனப்பூர்வமான ஆதரவையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது இத்தீர்மானம் பிரதமமந்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

......

## விவேகானந்த சபை வருடாந்தக் கூட்டம்

கோட்டை, வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபையின் 68-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் சபை மண்டபத்தில் இம்மாதம் 17-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது

68-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தை ஒட்டி அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நோன்மதி நாட்களில் வழமைபோல் வெலிக்கடை மஹற சிறைச்சாலைகளில் இந்துக் கைதிகளுக்குச் சமய போதனை நடாத்தப்பட்டது. தீபாவளி தைப் பொங்கல் போன்ற சமய முக்கியத்துவம் வாய்ந்த நாட்களை இந்துக் கைதிகள் கொண்டாட உதவிகள் செய்யப்பட்டன. வெலிக்கடை இந்துக் கைதிகளின் வேண்டுகோளின்படி அவர்களுக்கு ஒரு வானொலிப் பெட்டி உபகரிக்கப்பட்டது. இதன் கிரயத்தில் கணிசமான ஒரு பகுதியைக் கைதிகளும் கணிசமான இன்னொரு பகுதியை எலெக்ட் ரேடியோ நிறுவன உரிமையாளர் திரு. செல்லத்துரை டன்மால் அவர்களும் தந்து உதவினர்கள்"

## சில அதிக ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்க்க என்பதும் ரசிக்க வேண்டிய விஷயங்களே.

இவைபோன்ற சில்லறைக் குறைகள் இல்லாமல் பிரசங்கம் பண்ண முடியாதா என்ன?

'அப்படி எல்லோருமே ஒழுங்கான கலைப்பிரசங்கிகள் பண்ணக்கூடியவர்களாக இருந்தால், உமக்கு இவ்வளவு நீளம் கட்டுரை எழுதுவதற்கு விஷயம் கிடைக்குமாவே?' என்று கேட்பீர்களோ?

அதுவுஞ் சரிதான்!

பிரசங்கம் பேசுவதில் தகராறு ஏற்படாமலிருப்பதன்வேண்டி, பலர் குறிப்பு எடுத்து வைத்துக்கொள்வது வழக்கம். அதைவிடச் சிறந்தது பிரசங்கத்தை எழுதிப் படித்துவிடுவது சங்கடமே ஏற்படாது இதில். மகாநாடுகளில் எல்லாம் பெரிய மனுஷர்கள் பேசவா செய்கிறார்கள்? பிரசங்கத்தை பார்த்துப் படிக்கத்தானே செய்கிறார்கள்!

மகாநாட்டைப் பற்றிச் சொல்வானேன்? ரேடியோ இருக்கு பாருங்க ரேடியோ- அங்கே நடப்பது என்ன? ரேடியோவில் பிரசங்கம் என்றாலே, முன்கூட்டி எழுதியதை பார்த்து வாசிப்பது என்றுதான் அர்த்தம். அப்புறம் என்னவாம்!

—சிவாஜி

## காடைத்தனம், கொள்ளை: முழுமூச்சுடன் ஈடுபாடு

கோட்டை, வெள்ளி

பயங்கரவாதிகள் இப்போது கொள்ளையடித்தல் காடைத்தனம் ஆகியவற்றில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன, குருநாகல் மாவட்டத்திலும் மற்றும் சில பகுதிகளிலும் இப்படியான சம்பவங்கள் பரவலாக நடந்துள்ளன.

காலியில் கைதுசெய்யப்பட்ட பயங்கரவாதி ஒருவனிடமிருந்து மீரிய கொட புடவை ஆலையிலிருந்து களவாடப்பட்ட புடவைகளின் ஒரு பகுதி கைப்பற்றப்பட்டது.

நேற்றுமட்டும் 64 பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளார்கள். 42 பேர் கைதானார்கள். கேகாலை மாவட்டத்தில் 26 பேர் சரணடைந்தும் 8 பேர் கைதும்செய்யப்பட்டார்கள். பொலநறுவையில் 4 பேர் சரணடைந்தனர். கண்டகண்டி என்ற இடத்தில் 12 பேர் கைதானார்கள்;

—

## நிவாரணநிதி

### சுன்னாகம் பட்டின சபை ரூ. 305 வழங்கியது

யாழ்ப்பாணம் வெள்ளி

பொலிஸ், பாதுகாப்புப் படையினரின் குடும்ப நிவாரண நிதிக்கு சுன்னாகம் பட்டினசபை 305 ரூபா அனுப்பி வைத்துள்ளது

சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு பொ நாகலிங்கம் நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேராவுக்கு இந்தக் காசோலையை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் நிதிமந்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

'இப்பணம் சுன்னாகம் பட்டினசபையும் அங்கத்தவர்களும் அதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் மற்றும் கடமை செய்பவர் யாவர்களும் சேர்த்துத் தங்களுக்கு அனுப்பச் செய்துள்ளார்கள். இப்பணம்தொகை சிறிதாயினும் எங்கள் தாய்நாட்டின் ஜனநாயக அரசியல் வாழ்வு பங்கப்படாதிருக்க பாதுகாக்கும் பொருட்டு தங்களது ஆருயிரை அர்ப்பணஞ் செய்த பொலிசார் இராணுவ வீரர்கள் என்போரின் குடும்பத்தினருக்கு அவர்கள் செய்த நன்றிபதிற்கு அடையாளமாக அன்புடன் வழங்கப்பட்டதாகும்.

நாங்கள் வட இலங்கையின் கண்ணேயுள்ள ஒரு சிறிய பகுதியினராயினும் இந்த நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில் அரசினர்க்கும் பிரதம மந்திரியாருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

வட இலங்கையின் கண்ணே நாங்கள் இப்போது அடைந்துவரும் கஷ்டங்களை தென் இலங்கையில் நமது சகோதரமக்கள் சென்ற ஒரு மாதகாலமாக அடைந்தனவும் அடைந்து வருகின்றதுமான கொடிய கஷ்டங்களோடு ஒப்பநோக்கின் அவைகள் மிகச்சிறியனவாகவே தோன்றும். படுகொலைகள், இரத்தப் பெருக்குகள். பலத்த காயங்களுக்கு மத்தியில்வாழ்ந்து அவர்கள் அளவில்லாத துயரங்களை அடையும் இந்த ஆபத்தான நிலையில் நாம் வேண்டிய வேண்டிய உதவிகளைப் புரிய முழுமனதோடு இருக்கின்றோம் என்பதை அவர்கட்கு அறியச் செய்வது நமது பெருங்கடனாகும்.

கடிதத்தின் பிரதி பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## கோரிக்கை

சுழிபுரம், ஞாயிறும்

சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்றலில் புதிதாகத் திறக்கப்பட்ட பாதை முற்றாகச்செப்பனிடப்பட்டு பூர்த்தியடையாமல் இருக்கின்றது. மிகவிரைவில் கோவில் திருவிழா ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. பக்தர்கள் போக்குவரத்துக்கு கஷ்டமாகவும் போக்குவரத்து செய்ய முடியாமலும் இருக்கின்றதால் உடன் செப்பனிட ஒதுக்கப்பட்ட பணத்தின் மிகுதிப் பணத்தை தந்துதவுமாறு வலிகாமம் மேற்கு காரியாதிகாரியிடம் சுழிபுரம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி கேட்டுள்ளார்,

—

## ஹோட்டல் பாடசாலை

கோட்டை, வெள்ளி

இலங்கை ஹோட்டல் பாடசாலை இம்மாதம் 18-ம் திகதி ஆரம்பமாகிறது என்று அறிவிக்கப்படுகிறது. சகல ஹோட்டல் படிப்பு மாணவர்களும் 17-ம் திகதி மாலையே சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றனர்

......

## வீட்டுத்தோட்டப் போட்டிகள்

குருநகர், வெள்ளி

யாழ், மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட இளம் விவசாயிகள் சங்கங்களுக்கிடையிலான வீட்டுத் தோட்ட போட்டியின் இறுதித் தேர்வுகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போட்டியில் மாவட்ட இளைஞர்கள் பிரிவாக 3 பேரும் விவசாய போதனாசிரியர் பிரிவில் 3 பேரும் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் பிரிவுக்கு 3 பேரும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர் இவர்களுக்கான பரிசில்களை மாவட்ட விவசாய விஸ்தரிப்பு இலாகா வழங்கவிருக்கிறது.

—— ——

## "கிராம முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும்"

சுழிபுரம், வெள்ளி

"கிராம முன்னேற்றத்துக்காக உழைப்பதே சனசமூக நிலைய அங்கத்தவர்கள் கடமையாகும். சிரமதானம், விளையாட்டு, சமயப்பணி போன்ற கருமங்களில் ஈடுபட்டுக்கொண்டு முன்னேறுவதுடன், தாம், தாம் செய்யும் பணியை சகலருக்கும் தெரியச் செய்யவேண்டும். வாசிகசாலை நடாத்தி உலகப் புதினங்களை வாசித்து அறியவும், வானொலி மூலம் புதினங்களைக் கேட்கவும் இலக்கிய நாடகங்களை கேட்கவும் செய்யவேண்டும். சமயப் பணியில் ஈடுபாடு கொண்டு உழைப்பதன்மூலம் அரசாங்கத்தின் நன்கொடையைப் பெற்று பல ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய வேண்டும் இது ஓர் அரிய வாய்ப்பாகும்" இவ்வாறு சுழிபுரம் பகுதி சனசமூக நிலையங்களின் பரிசோதனையை நடாத்திய பின்னர் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வடபகுதி சனசமூக உத்தியோகத்தர் திரு. எஸ் கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்.

சுழிபுரம் இராமசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு சுழிபுரம் இராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகு

பகைவர் அயலோர் நகுபினர் என்னும் இம் மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல் ஒப்பநிற்றல் நடுவுநிலைமை எனப்படும். — நாவலர்.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் வைகாசிமாதம் 1 - ந்திகதி ( 15 - 5 - 71)

## தடுப்புக்காவல் தரும் தகவல்

பயங்கரவாத இயக்கத் தொடர்பாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்போரில் சுமார் இரண்டாயிரம் பேர் மாணவர்களென்றும் மற்றும் ஐம்பது வீதத்தினர் ஏற்கனவே வேலையிலிருப்பவர்களென்றும் நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தகவல் வெளியிட்டுள்ளார். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் சம்பந்தமான வரலாறுபற்றி நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த விபரங்கள் தெரியவந்துள்ளனவாம். இந்த இரண்டாயிரம் பேரிலும் எத்தனை பேர் பாடசாலை மாணவர்கள்; எத்தனை பேர் பல்கலைக் கழக மாணவர்கள்? இது யாருக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயமல்ல. பயங்கரவாத இயக்கத்தில் மாணவர்கள் சம்பந்தப்பட்டிருக்கும் அம்சம் மிகத் தீவிரமாக ஆராயப்படவேண்டிய விஷயமாகும். உலகில் எந்த சோஷலிஸ நாட்டிலும் கூட இல்லாதபடி நமது நாட்டில்தான் இலவச அரிசி, இலவசக்கல்வி, இலவச வைத்திய உதவி என்று பல வசதிகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இத்தனை வசதிகளும் சலுகைகளும் கிடைக்கும் நாட்டில் பயங்கரவாத இயக்கம் தோன்றியதும் அதில் மாணவர்களும் சம்பந்தப்பட்டிருப்பதும் அரசாங்கத்தினது மட்டுமல்ல பொது மக்களினதும் கருத்தைப் பெரிதும் கவரவேண்டிய தலையாய விஷயமாகும்.

உள்நாட்டில் இராணுவத்தைக் கொண்டு சண்டையை முறியடிப்பது பெரிய காரியமல்ல. இப்பொழுதே அது வெற்றியளித்துள்ளது- ஆனால் இந்த இயக்கத்தை அரசியல் ரீதியாகவேருடன் களைவதென்பது வேறு விஷயம். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் விதைக்கப்பட்ட விஷ வித்துக்களை பூண்டோடு அறுப்பதென்பது அரசாங்கத்துக்குச் சுலபமன்று. இதற்குப் பகீரதப் பிரயத்தனம் வேண்டும்.

என்றாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை வன்முறையால் கவிழ்ப்பதற்கு முயற்சிசெய்யும் இயக்கத்தை வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருப்பினும் சகல அரசியல் கட்சிகளும் ஒருமுகமாகக் கண்டித்திருப்பது இந்த இயக்கத்தை முற்றாக ஒழித்துக்கட்ட முடியுமென்ற நம்பிக்கையை அளிப்பதாக இருக்கிறது. அதிருப்தி அடைந்த அரசியல்வாதிகளும் அதிகாரஆசை கொண்ட அநாமதேயத் தலைவர்களும் இளைஞர்களைக் கடத்திச் சென்றும், பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வெள்ளை உள்ளங்களில் விஷமூட்டப்பட்டிருக்கிறதென்பது இப்போது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளதால் இந்த முயற்சியை பெற்றோரும் பொது மக்களும் வெறுத்துக் கண்டிப்பர் என்பது திண்ணம்.

கல்விமான்கள், நிர்வாகத் திறமைசாலிகள், கட்சிச் சார்பற்ற அரசியல் அறிஞர்கள் ஆகியோரைக் கொண்ட பாரபட்சமற்ற உயர்தரக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். இக்குழு பாடசாலைகள் பல்கலைக்கழகங்களில் இந்தப் பயங்கர இயக்கம் எப்படித் தலைகாட்டியதென்பதுபற்றி ஆராய்ந்து விரைவில் ஓர் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். (1) இந்த இயக்கம் தேசியப் பாடசாலைகளில் நுழைவதற்கு வாய்ப்பாக இருந்ததென்ன? (2) இதில் ஆசிரியர்களின் பங்கு என்ன? (3) இலங்கையர்கள் மற்றும் துறைகள் மூலம் வெளியாரினதும் அந்நிய சக்திகளினதும் தலையீடு எந்த அளவுக்குப் பாடசாலைகளில் இருந்தது? (4) சதிவேலைகளுக்கான பிரசாரத்துக்கும் ஆதரவு திரட்டவும் கல்விமுறையும் பாடசாலை நிர்வாக முறையும் எவ்விதம் வாய்ப்பாக இருந்தது? இதற்கான காரணம் என்ன?

இவற்றை ஆராய்ந்து அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்ததும் அதைக் கொண்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுத்து இனிமேலும் எவரும் இந்த மாதிரியான செயல்களில் ஈடுபடத் துணியாதபடி கடுந்தண்டனை விதிக்கப்படவேண்டியது அவசியம்.

இதேசமயம் இதுவரை விடுத்த தவறுகளைத் திருத்திக் கொள்ளக் கூடிய முறையில் கல்விமுறையையும் பாடசாலை நிர்வாக முறையையும் திருத்திக் கொள்ள முன்வரவேண்டும்.

பாடசாலை நிர்வாகத்தில் கடுமையான கட்டுப்பாடு இருக்க வேண்டியதன் அவசியத்தை இன்றைய சம்பவங்கள் உணர்த்தியிருக்கின்றன.

இவ்வருங்கால நற்பிரஜைகளை உருவாக்கும் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வெளியிலிருந்து நச்சுக் காற்றுப் புகாமல் தடுப்பதில்தான் ஆட்சிமன்ற ஜனநாயக அமைப்பின் வெற்றியும் அதன் பயனும் பெரிதும் தங்கியிருக்கிறது.

## பயங்கரவாதிகள்...!

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

இலங்கைக் கட்டுறவு மொத்த விற்பனை நிறுவன ஊழியர்கள் தமது ஒருநாளைய சம்பளத்தை அரசாங்கத்துக்கு வழங்க முன்வந்துள்ளனர். கிழக்குப் பிராந்திய ஆசிரிய சங்கமும் அரசாங்கத்துக்கு கடிதமூலம் ஒரு நாளைய சம்பளத்தை வழங்கவிருப்பதாகத் தம் தெரிவித்துள்ளது.

வடபகுதி அசைஸ் விசாரணை

# தேவராசாவை 1-ம் எதிரி சுடுவதை நான் கண்டேன்

## பருத்தித்துறை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், சனி

"இரத்தினசிங்கத்திற்கு சூடு பிடித்ததும் அவர் கையைப் பிடித்துக்கொண்டுகிழக்குப் பக்கமாகப் போனார். 10அடி போனபின் ஆனந்தன் வெட்டினார்".

பருத்தித்துறை கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த இரத்தினம் தவராசா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று மூன்றாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இரத்தினம் தவராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

தேவராசா 3ம் எதிரியை தாக்குவதற்கு மண்வெட்டியை ஓங்கிக்கொண்டுபோனார் நான் இரத்தினசிங்கத்திற்கு உதவியளிக்கப் போனேன். அப்போது 'வாருன் சுடு' என்று 1ம் எதிரியை தவிர மற்ற எதிர்கள் சொன்னார்கள். நான் பார்த்தபோது 1ம் எதிரி, தேவராசாவை சுடுவதைக் கண்டேன். சூடு தேவராசாவில் பட்டது. அவர் நிலத்தில் விழுந்துவிட்டார். நான் இரத்தினசிங்கத்தை தூக்கினேன். 1-ம் எதிரி எனது சொந்தக்காரன். 1ம் எதிரி துவக்குவைத்திருந்தார். 3-ம் எதிரி வாள் வைத்திருந்தார். 2ம் எதிரியிடம்ஒரு ஆயுதமும் இருக்கவில்லை. மற்ற எதிரிகள் கல், இரும்புக்கம்பிகள் வைத்திருந்தார்கள். எதிரிகள் கிழக்குப்பக்கமாகப் போனார்கள்.

நாகலிங்கம் என்பவரைத் தெரியும். நான் இரத்தினசிங்கத்தின் காயத்தை ஒரு சாரத்தினால் கட்டினேன் என்பது ஞாபகமிருக்கிறது. குலந்திரசிங்கத்தை அப்பொழுது நான் காணவில்லை. அவ்விடத்தில் ஆட்கள் கூடினார்கள். அழகையா கார் ஒன்று பிடித்துவந்தார், காயமடைந்தவர்களான, இரத்தினசிங்கம், தேவராசா நாகலிங்கம் ஆகிய மூவரையும் காரில் ஏற்றினோம் நானும் அழகையாவும், குலந்திரசிங்கமும் காரில் போனோம். காலை 9 மணிக்கு சம்பவம் நடந்தது. வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு காரில் போனோம். அழகையாவும், நானும்காரிலிருந்து இறங்கிப்பொலிஸ் நிலையத்திற்கு போனோம் இன்ஸ்பெக்டரும் பொலிசாரும் அங்கு இருந்தார்கள். நான் நடந்த சம்பவத்தை சொன்னேன். பொலிசார் காருக்கு வந்து காயமடைந்தவர்களைப் பார்த்தார்கள். நானும் அழகையாவும், பொலிஸ் நிலையத்தில் நின்றோம் பொலிசார் காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்குகொண்டுசென்றார்கள் பொலிசார். முதலில் அழகையாவின் வாக்குமூலத்தை பதிவுசெய்தார்கள். அதன்பின் நான் வாக்குமூலமளித்தேன் நான் தான் முதலில் பொலிசாருக்கு தகவலைக் கொடுத்தேன்.

நிற்குழுவைரவ கோவிலை தெரியும் நொத்தாரிஸ் தோட்டத்திலிருந்து கால் கட்டை தூரத்தில் அக்கோயில் இருக்கிறது கோவிலுக்கு மின்சார வெளிச்சம் போடப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் நடப்பதற்கு சுமார் 1 வருடத்திற்கு முன் கோவிலுக்கு மின்சாரம் போடப்பட்டது. கிராமத்தில் பணம் சேர்த்து கோவிலுக்குமின்சாரம் போட்டார்கள் நானும் பணம் கொடுத்தேன்.

இந்த வழக்கில் பருத்தித்துறையிலுள்ள கும்பாந்துறை என்றஇடத்தில் 69-ம் ஆண்டு அக்டோபர் 12-ம் திகதி வேலுப்பிள்ளை செல்வரத்தினம் சின்னத்தம்பி இராசதுரை கந்தசாமி பரமானந்தம், இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராசா சிவக்கொழுந்து நற்குணராசா ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும், கூட்டத்தில் பொது நோக்கத்துடன் சுந்தரம் இரத்தினசிங்கம் கந்தையா தியாகராசா மற்றும் அவர்களுடன் வந்தவர்களையும் கொலை செய்யும் நோக்கத்துடன் வந்துள்ளார்களென்றும் அதே இடத்தில் 1-ம் எதிரியான வேலுப்பிள்ளை செல்வரத்தினம் சுந்தரம் இரத்தினசிங்கத்தை சுட்டுக் கொலை செய்ததாகவும், அதேஇடத்தில் அதே நேரத்தில் 1-ம் எதிரியான செல்வரத்தினம் குறித்த கந்தையா தேவராசாவை சட்ட விரோத கூட்டத்தின்பொதுநோக்கத்தின் படி கொலைசெய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் 6 எதிரிகளும் சுந்தரம் இரத்தினசிங்கத்தை கொலை செய்ய முயற்சித்ததாகவும் தேவராசாவை கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

## கிணறுவெட்ட சிரமதானம்

உடுப்பிட்டி, வெள்ளி

"மனத்தூய்மையுடனும், அன்புடனும்பணிசெய்வதின் மூலமே வாழ்வில் இன்பமடையலாம். படித்த வாலிபர்கள் சிரமதான இயக்கங்களில் ஈடுபடுவதின் மூலம் தங்கள் வாழ்க்கையை வளம்படுத்தமுடியும்" என பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலைய சேவாச் சிரமத்திற்கெனப் புதிதாகவழங்கப்பட்டகாணியில் கிணறொன்றைச் சிரமதானம் மூலம் வெட்டும் பணியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் பி இரத்தினசபாபதி குறிப்பிட்டார். இச்சிரமதான இயக்கத்தில் பல ஆச்சிரமத் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்தில் [illegible] 1971-ம் ஆண்டு [illegible] வெளியிடப்பட்டது.

## வினாத்தாள் அச்சிட தனி அச்சகம்

கோட்டை, வெள்ளி

பரீட்சை இலாகாவினால் புதிதாக நிறுவப்பட்டுள்ள அச்சுக்கூடத்திலேயே இனிமேல் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் அச்சிடப்படவுள்ளன

இத்தகவலை பரீட்சைப் பகுதி ஆணையாளர் டாக்டர் டபிள்யூ. சுமணசூரியா நேற்று முன்தினம் தெரிவித்தார் தற்போது ஒத்திபோடப்பட்டுள்ள ஜீ சி ஈ சாதாரண பரீட்சைக்கான வினாத்தாள்கள் மேற்படி அச்சுக்கூடத்திலேயே அச்சிடப்படுமென்றும் இவ்வச்சுக்கூடம் ரூபா 250,000 செலவில் நிறுவப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை
7-30
மணி முதல்
நாளை காலை
4-30
மணி வரை

## இன்று

வில்லூன்றி ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் கொடியேற்றத் திருவிழாவாகிய இன்றுகாலை 9 மணிக்கு தவஜாரோசகணமும் மாலை மூஷிக வாகனத்தில் வீதிவலம் வருதலும். தினமும் மாலை 4 மணி தொடக்கம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் பக்கவாத்தியசகிதம் சங்கீத கதாப் பிரசங்கமும் நடைபெறும்.

## அரசியல் நிர்ணயசபை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளினால்பயங்கரவாதிகளது நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கிறார்கள் என்பதை நாடறிந்து கொள்ளவேண்டும். நேரடியாக பயங்கரவாதிகளுடன் சேர்ந்து ஆயுதமேந்தி சண்டையிடப் பயப்படுபவர்கள் தான் இப்படியான மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆதரவளிக்கின்றார்கள். ராணுவ ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் ரீதியாகவும் பயங்கரவாதிகளுக்கு இறுதி முடிவுகாண வேண்டுமானால் எமது நாடு துரித கெதியில் முன்னேற வழிவகுக்கும் ஒரு புதிய அரசியல் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டியது மிகமிக அவசியம் பயங்கர வாதிகளுக்கு ஆதரவு அளிக்க விரும்புவோர் அவர்களுடன் சேர்ந்து துப்பாக்கி ஏந்திப் போரிட்டட்டும், எத்தனைபேர் ஆயுதமேந்திப் போரிட்டாலும் அரசாங்கத்தை அசைக்க முடியாதென்றார்.

தமிழரசுக்கட்சியினால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணை தோல்வி அடைந்தது ஸ்ரீலங்கா மதசார்பற்ற நாடாகவும் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் இஸ்லாம் ஆகிய எல்லா மதங்களும் சமத்துவமாகப்பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே தமிழரசுக்கட்சியினால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணையாகும். இவ்விவாதத்தில் எதிர்கட்சியில் தமிழரசுகட்சி கலந்து கொண்டது, தமிழ் காங்கிரஸ் எம் பிக்களும் சமூகமளித்திருந்தனர்.

அரசியல் நிர்ணய சபை மீண்டும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org